செய்தி வெளியீடு எண்: 223/2018 நாள்: 16.04.2018

**வேலூர் மாவட்ட ஆட்சியர் அலுவலகத்தில் மக்கள் குறைதீர்க்கும் நாள் கூட்டம் மாவட்ட வருவாய் அலுவலர் மரு.தா.செங்கோட்டையன் அவர்கள் தலைமையில் நடைபெற்றது!**

வேலூர் மாவட்ட ஆட்சியர் அலுவலகத்திலுள்ள காயிதே மில்லத் அரங்கில் மக்கள் குறைதீர்க்கும் நாள் கூட்டம் மாவட்ட வருவாய் அலுவலர் மரு.தா.செங்கோட்டையன் அவர்களின் தலைமையில் நடைபெற்றது. இக்கூட்டத்தில் நிலப்பட்டா, புதிய குடும்ப அட்டை, பட்டாமாறுதல், வேலைவாய்ப்பு, கடனுதவி, நிதியுதவி, இலவச வீட்டுமனைப்பட்டா, முதியோர் உதவித் தொகை, காவல்துறை பாதுகாப்பு, மின் இணைப்பு மற்றும் பொதுநல மனுக்கள் என 331 மனுக்களை வழங்கினர். இம்மனுக்களை பெற்றுக்கொண்ட மாவட்ட வருவாய் அலுவலர் அவர்கள் சம்மந்தப்பட்ட துறை அலுவலர்களிடம் வழங்கி மனுக்கள் மீது உடனடியாக நடவடிக்கை எடுக்க உத்தரவிட்டார்.

இக்கூட்டத்தில் மாவட்ட பிற்படுத்தப்பட்டோர் நல அலுவலர் திரு.ஜெயபிரகாஷ், மாவட்ட ஆதிதிராவிடர் நலத்துறை அலுவலர் திரு.கஜேந்திரன், துணை ஆட்சியர் (சமூக பாதுகாப்புத் துறை) திருமதி.பேபிஇந்திரா, மற்றும் அனைத்து அரசு துறை அலுவலர்கள் கலந்துக் கொண்டனர்.

வெளியீடு:

செய்தி மக்கள் தொடர்பு அலுவலர்
வேலூர்-9.